# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0073 /2016/ந

ஆணை எண்: 006/2017

நாள்: 09/01/2017

திரு. M. குமரன்,
எண்.136, செந்தி விநாயகபுரம் தெரு,
விருதுநகர் – 1.
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

முன்னாள் நகர் மன்றத் தலைவர் மற்றும்
நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி. – எதிர் மனுதாரர்கள்

## ஆணை:

மனுதாரது 02.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு 05.02.2016-ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்: 0073/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி மனுவில் விருதுநகர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் குடிநீர் வழங்கும் பணிகளில் முறைகேடுகள் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு அனுப்பிய விவரமும் வரப்பெற்றுள்ளது. இது குறித்து பதிலறிக்கை தாக்கல் செய்யுமாறு விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு 09.03.2016 நாளிட்ட அறிவிப்பாணை அனுப்பப்பட்டது.

3. விருதுநகர் நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற பதிலறிக்கை ந.க.எண். இ3/2930/16 நாள்: 22.03.2016ல், புகாரில் கூறப்பட்டுள்ள பணிகளில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என உறுதியளித்து, பணிகளின் நிலை விவரம் மற்றும் புகைப்பட ஆதாரங்களுடன் விரிவான பதில்கள் வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டன.

4. 2015–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படும் முறைகள்) விதிகளில், விதி-4ன் படி ரூபாய் 10/–க்கான நீதிமன்ற கட்டண வில்லையினை சமர்ப்பிக்குமாறும், 23.5.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறும் தெரிவித்து மனுதாரருக்கு அழைப்பாணை (அசல் மனு எண். 0073/2016/ந, நாள்:12.04.2016) அனுப்பப்பட்டது. மனுதாரர் தனது 11.5.2016 நாளிட்ட கடிதத்தில் தன்னால் தனது பணியினை ஒதுக்கி பணம் செலவு செய்து சென்னைக்கு வர இயலாதெனவும் விசாரணை நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட வேண்டுமெனவும், புகாரிலுள்ள திட்டப்பணிகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

5. மனுதாரர் விசாரணைக்கு வரத்தவறியபோதும் நகராட்சியிலிருந்து வரப்பெற்ற அறிக்கையின் மீதான தனது கருத்துரைகளை தெரிவித்திட ஏதுவாக வாய்ப்பளித்து மேற்படி அறிக்கையின் நகல் மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை (அசல் மனு எண்: 0073/2016 நாள் 25.05.2016) மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

6. இதனிடையே 07.06.2016 நாளிட்ட மனுதாரரது பிறிதொரு புகார் மனு வரப்பெற்றது. அதில் பாதள சாக்கடை இணைப்பு வழங்குவதில் முறைகேடு எனவும் அவ்வாறு இணைப்பு வழங்கப்பட்ட பகுதிகளில் சாலைகள் சேதமடைந்துள்ளதாகவும், சிமெண்ட் சாலைகள் உடைக்கப்பட்டு பேவர் பிளாக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரது மனுக்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு 10.06.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

7. அதன்படி திருநெல்வேலி மண்டல, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது விரிவான அறிக்கை (ந.க.எண்.இ3/2930/16 நாள்:3.8.16) வரப்பெற்றது. அதில் பணிகளின் நிலை குறித்து பட்டியல்கள் மற்றும் ஆவண நகல்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டலம் இயக்குநரது 28.11.2016 நாளிட்ட பிறிதொரு அறிக்கையில் மனுதாரர் 8.11.2016 அன்று நேரில் விளக்கம் சமர்ப்பித்திட ஏதுவாக அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும், அதன்படி ஆஜரான மனுதாரர் தனது விளக்கம் எதுவும் அளிக்காமல் சென்றுவிட்டதால் மனுதாரரின் தன்மை மற்றும் நிலைபாடு குறித்து அறிந்துகொள்ள இயலவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. நகராட்சி ஆணையரது அறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கைகளை ஏற்று இம்முறையீட்டு மனுவின் மீதான மேல் நடவடிக்கையினை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/1/2017
செயலாளர்.

பெறுநர்:

1. திரு. M. குமரன்,
   எண்.136, செந்தி விநாயகபுரம் தெரு,
   விருதுநகர் – 1,
   விருதுநகர் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   விருதுநகர் நகராட்சி,
   விருதுநகர் -1, விருதுநகர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   (திருநெல்வேலி மண்டலம்)
   ராம் பாப்புலர் சாலை,
   மனக்காவலம் பிள்ளை நகர்,
   திருநெல்வேலி – 2.